# இரண்டாவது வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத்திட்டம் (நியாப் II)

## வாழ்வாதார உதவிச் செயற்பாடுகள் பற்றிய நடைமுறைகள்

# பாவனையாளர் கைநூல்

## மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பாவனைக்கானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாவது வடக்கு கிழக்கு
## நீர்ப்பாசன விவசாயத்திட்டம்
## (நியாப் II)

# பாவனையாளர் கைநூல்

## வாழ்வாதார உதவிச் செயற்பாடுகள்
## பற்றிய நடைமுறைகள்

## மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின்
## பாவனைக்கானது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவனையாளர் கைநூல்

1. பாவனையாளர் கைநூலின் நோக்கம்
2. வாழ்வாதார உதவிச் செயற்பாடுகளின் குறிக்கோள்
3. வாழ்வாதார உதவிச் செயற்பாடுகளின் வகைகள்
4. ஈடுபடும் முக்கிய நபர்கள்
5. உங்களது (WRDS) பொறுப்புக்கள்
6. நிறுவன ஒழுங்கமைப்புக்கள்
7. சேமிப்பு - கடன் கொள்கைகளும், நடைமுறை விதிகளும்
8. அமுலாக்கல்
   - 8.1. சசிறுகுழுக்களை உருவாக்கல்
   - 8.2. சிறுகுழு சேமிப்பு
   - 8.3. நிர்வாகக்குழு உருவாக்கல்
   - 8.4. கடன்குழு உருவாக்கல்
   - 8.5. வங்கிக்கணக்கு ஆரம்பித்தல்
   - 8.6. தொழில்முயற்சித்திட்டம், கடன்விண்ணப்பம் என்பன தயாரித்தல்.
   - 8.7. கணக்குப்பதிவு, கடன்தொடர்நடவடிக்கைசார் பயிற்சி
   - 8.8. கடன் விண்ணப்பங்களை மதிப்பீடு செய்தலும், அனுமதித்தலும்
   - 8.9. பிரதித்திட்டப் பணிப்பாளருடன் ஒப்பந்தம் கைச்சாத்திடல்
   - 8.10. உள்ளீடுகளைக் கொள்வனவு செய்தலும், விநியோகித்தலும்.
   - 8.11. கொடுப்பனவு, பணக்கோரிக்கை முறை
   - 8.12. அமுலாக்கலில் உதவி
   - 8.13. இருப்பு எடுத்தல்
   - 8.14. மதிப்பீடு செய்தல்
   - 8.15. சுழற்சிக்கடன் நிதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்புக்கள்

- பின்னிணைப்பு - i தொழில் முயற்சித்திட்டம்
- பின்னிணைப்பு - ii தேர்வுச்சட்டகம்
- பின்னிணைப்பு - iii நியாப்II உதவித்திட்டத்தின் கீழ் நிதி உதவிக்கான விண்ணப்பமும், ஒப்பந்தமும்
- பின்னிணைப்பு - iv பி.தி.ப.(D.P.D)உடனான ஒப்பந்தப் பத்திரம்
- பின்னிணைப்பு - v தனிநபர் கடன் விண்ணப்பம்
- பின்னிணைப்பு - vi தனிநபர் கடன் ஒப்பந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வாதார உதவி நடைமுறைக் கையேட்டின் சமூக விவரணம்

## 1. பாவனையாளர் கைநூலின் நோக்கம்:

வாழ்வாதார உதவிச் செயற்பாடுகள் செயற்திட்டத்தின் சமூக விபரணம், மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு விசேடமாக மையக்கிராம வாழ்வாதார உதவிச் செயற்பாடுகளின் செயற்திட்ட முகாமைத்துவத்தில் ஈடுபட்டுள்ள மாதர் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாக அங்கத்தவர்களுக்கு அறிவூட்டுவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இக்கைநூல் சமூகத்தினதும், மா.கி.அ.ச. அங்கத்தவர்களினதும் கடமைகளையும் பொறுப்புக்களையும், சேமிப்பு, கடன் நடவடிக்கைகள் சம்பந்தமான பல்வேறு விதிமுறைகளையும் கொண்டுள்ளது.

## 2. வாழ்வாதார உதவிச் செயற்பாடுகளின் குறிக்கோள்:

நலிவுற்ற மக்களின் தரமான வாழ்வையும், வாழ்க்கை நிலையையும் அதிகரிப்பது வா.உ. செயற்றிட்டத்தின் குறிக்கோளாகும். இக்குறிக்கோள்களை சிறுகடன், சுழற்சிமுறைக் கடன் (RLF) நிதிக்கொள்கைகளைப் பிரயோகித்து விசேடமாக திட்டப்பகுதியில் உள்ள சமூக பொருளாதார நிலைமைகளுக்கேற்ப, வருமானமீட்டும் செயற்பாடுகளுக்காக சமூகத்தில் மிகவும் நலிவுற்ற மக்களுக்கு சிறுகடன்களை கொடுக்குமுகமாக மா.கி.மு.ச.க்கு நிதி வழங்குவதூடாக அடையப்படும்.

## 3. வாழ்வாதார உதவி செயற்பாட்டு வகைகள்:

கிராமங்களில் பல வருமானமீட்டும் செயற்பாடுகள்(IGA) அதாவது மிருக வளர்ப்பு, வீட்டுத் தோட்டம், சுயதொழில் செயற்பாடுகள் போன்றன உள. இத்தகைய செயற்பாடுகள் சுயதொழில், வினைத்திறன் அதிகரிப்பு, இடர்தணித்தல் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டவையாகும்.

வருமானம் ஈட்டும் செயற்பாடுகள்(IGA) தனிநபர்களினால் குறிப்பாக பெண்களினால் நடை முறைப்படுத்தப்படுகின்றன. வருமானம் ஈட்டும் செயற்பாடுகள்(IGA) வீட்டுச் செலவுகளையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்திச்செலவுகளையும், கடனை வட்டியுடன் செலுத்தவும் போதுமான வருமானத்தைத் தருவதாக அமைய வேண்டும். இதற்காக உங்களது கிராமத்தில் நீடித்திருக்கக்கூடிய செயற் திட்டத்தை உறுதிப்படுத்துவதன் நோக்கமாக, சாத்தியமான வருமானமீட்டும் செயற்பாடுகளை இனம் காணுவதுடன் பயனாளிகளையும் நீங்கள் தெரிவு செய்ய வேண்டும்.

## 4. ஈடுபடும் முக்கிய நபர்கள்

உங்கள் கிராமத்தில் வாழ்வாதார உதவிச் செயற்பாட்டுத் திட்டத்தினை நிறைவேற்றி முடிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடும் பல முக்கிய நபர்கள் உளர். இவர்களில் சிலரைக் கீழே காணலாம்.

- உங்கள் சகோதரிகள் அயலிலுள்ள உங்கள் சகபாடிகள்
- சமூக ஊக்குவிப்பாளர்கள்
- சமூக வலுவூட்டாளர்கள்
- கிராம உத்தியோகத்தர்
- கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்
- கமநல அபிவிருத்தி அலுவலர்
- விவசாயப் போதனாசிரியர்
- மிருக வளர்ப்பு அபிவிருத்தி அலுவலர்
- மீன்பிடி பரிசோதகர்
- தொழில்நுட்ப உத்தியோகத்தர்
- பிரதேச செயலாளர்
- அரச சார்பற்ற நிறுவனம்

## 5. உங்களது பொறுப்புக்கள்

பின்வரும் செயற்பாடுகளில் உங்களது தீவிர பங்கேற்பை நியாப் திட்டம் எதிர்பார்க்கிறது.

- குழு நடவடிக்கைகளுக்காக அங்கத்தவர்களைத் தயார் செய்தல்.
- பங்கேற்றலுடனான கிராமிய மதிப்பீடு(PRA) முறையூடாகத் தேவைகளை இனம் காணல்.
- சாத்தியமான திட்டங்களைத் தெரிவுசெய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உள்ளீடுகளைக் கொள்வனவு செய்தலும், விநியோகித்தலும்.
- அமுலாக்கால்.
- அமுலாக்கலைக் கண்காணித்தல்.
- பங்கேற்பவர்களை ஒருங்கிணைத்தல்.
- மதிப்பீடு செய்தல்.
- கடன் அறவீட்டை ஊக்குவித்தல்.

சமூக ஊக்குவிப்பாளர் (CF) தனிப்பட்ட முறையில் பின்வரும் செயற்பாடுகளுக்கு பொறுப்பானவராவார்.

- குழு நடவடிக்கைகளுக்காக அங்கத்தவர்களை தயார் செய்தல்.
- பங்கேற்றல் உடனான கிராமிய மதிப்பீடு(PRA) முறை ஊடாகத் தேவைகளை இனம் காணல்.
- சாத்தியமான திட்டங்களையும் அங்கத்தவர்களையும் தெரிவு செய்தல்.
- உள்ளீடுகளைக் கொள்வனவு செய்தலும், விநியோகித்தலும்.
- அமுலாக்கல்.
- பங்கேற்பவர்களை ஒருங்கிணைத்தல்.
- புத்தகங்களையும் பதிவேடுகளையும் பேணுதல்.
- நல்ல கடன் அறவீட்டை உறுதிப்படுத்தல்.
- கண்காணித்தலும், மதிப்பீடும்.
- சுழற்சிமுறைக் கடன் நிதியைப் பேணுதல்.
- இருப்பெடுத்தல்.

ஏனையவர்களும் பல வகைகளில் உங்களுக்கு உதவுவார்கள். நீங்கள் அவர்களது சேவை களைக் கேட்டுப் பெற்றுக்கொள்வதுடன் கிடைக்கும் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அதி உச்ச பயன்பாட்டை அடைய வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. நிறுவன ஒழுங்கமைப்புக்கள்

வாழ்வாதார உதவிச்செயற்பாடுகள்(LSA) மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் நிர்வகிக்கப்படுகின்றன. மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினுள் முழுநம்பிக்கை, ஒரே வருவாய்மட்டம், சமுதாயப்பிணைப்பு, ஒரே பொருளாதார நிலைமை, ஒரே விதமான அக்கறை என்பன உள்ள அங்கத்தவர்களை தேர்வு செய்து 5–7 பேர் அடங்கிய சிறுகுழுக்கள் அமைக்கப்படும். இலங்கை கூட்டுறவு அபிவிருத்திச் சட்டத்திற்கமைவாக சகல வயதுவந்த மாதர்களும் மா.கி.அ.ச அங்கத்தவர்களாகலாம். ஒவ்வொரு சிறு குழுக்களும் தமக்கென ஒரு தலைவரையும், பொருளாளரையும் தெரிவுசெய்வர். ஒவ்வொரு குழுக்களினதும் பொருளாளர் களையும் அங்கத்தவர்களாகக் கொண்டு கடன் குழுக்கள் அமைக்கப்படும். இக்குழு தமக்கென தலைவர், பொருளாளர், செயலாளர் ஆகியோரைத் தெரிவு செய்துகொள்ளும். ஒவ்வொரு சிறு குழுக்களினதும் தலைவர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட நிர்வாகக்குழு அமைக்கப்படும். இக்குழு தமக்கென தலைவர், உபதலைவர், செயலாளர், உப செயலாளர், பொருளாளர், நிர்வாக அங்கத்தவர்கள் ஆகியோரை சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி தெரிவு செய்யும்.

படிவம் 1 : நிறுவன ஒழுங்கமைப்பு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. சேமிப்பு-கடன் கொள்கைகளும், நடைமுறை விதிகளும்

| வகை | விதிகள் |
|---|---|
| 1. சிறு குழு அங்கத்துவம் | ▪ மையக்கிராமத்தில் நிரந்தரமாக வதியும் சகல வயது வந்த மா.கி.அ.ச. அங்கத்தவர்களும் சிறுகுழு அங்கத்தவராகலாம்.<br>▪ முழுநம்பிக்கை, ஒரே வருவாய் மட்டம், ஒரே அக்கறை, சமூகப் பிணைப்பு, ஒரே பொருளாதார நிலைமை என்பவற்றை அடிப்படை யாகக் கொண்டு சிறுகுழுக்கள் தமக்கிடையே சுயமாக தெரிவாவர்.<br>▪ சிறுகுழு அங்கத்துவம் 5-7 பேர் கொண்டதாகும்.(ஆகக்கூடியது)<br>▪ சிறுகுழு கிழமையில் ஒரு நாள் குறிக்கப்பட்ட நேரத்தில் குறிப்பிடப்பட்ட இடத்தில் ஒழுங்காக கூடவேண்டும்.<br>▪ ஒவ்வொரு குழுவும் அதற்கெனத் தலைவரையும், பொருளாளரையும் தெரிவுசெய்யும்.<br>▪ சிறுகுழுக்களின் பொருளாளர்கள் கடன் குழுவை அமைப்பர்.<br>▪ சிறுகுழுத் தலைவர்கள் நிர்வாகக் குழுவை அமைப்பர். |
| 2. சிறு குழு சேமிப்பு | ▪ ஒவ்வொரு சிறுகுழு அங்கத்தவர்களும் ஒழுங்கான முறையில் கட்டாயம் வாராந்தம் சேமிக்கவேண்டும்.<br>▪ சிறுகுழு சேமிக்கும் தொகையைத் தீர்மானிக்க வேண்டும். ஆனால் இத்தொகை கிழமைக்கு ஆகக்குறைந்தது எவ்வளவு எனத் தீர்மானிக்க வேண்டும். அத்துடன் பருவ நிலையினால் வருமான மின்மை காரணமாய் சேமிக்க முடியாவிட்டால் அது எவ்வெவ் மாதங்கள் எனக் குறிப்பிட வேண்டும்.<br>▪ பொருளாளர் வாராந்தம் சேமிப்புக்களைச் சேகரிப்பார். இச்சேமிப்புப்பணம் இக்குழுவுக்கிடையிலேயே புழக்கத்தில் இருக்கும்.<br>▪ ஒழுங்காக சேமிக்காத அங்கத்தவர்கள் கடன்பெறத் தகுதியற்றவர் களாவர்.<br>▪ சிறுகுழு தங்களது சேமிப்புக்களைத் தாம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| | தீர்மானித்தபடி கடன் வழங்கலாம்.<br>▪ பொருளாளர் ஒரு அப்பியாசப் புத்தகத்தில் சிறுகுழு சேமிப்பு சம்பந்தமான பதிவுகளைப் பேண வேண்டும்.<br>▪ சிறுகுழுவினது சேமிப்பு மா.கி.அ.ச.மட்டத்திற்குச் செல்லாது. |
| **3. தகைமைகள்** | ▪ பயனாளிகள் தேர்வுச்சட்டக(Selection Matrix) த்தின்படி தெரிவு செய்யப்பட்டு சமூக அங்கத்தவர்களால் தெரிவு வரிசைப்படுத்தப் படுவர்.<br>▪ சிறுகுழுவின் தனிப்பட்ட அங்கத்தவர்களுக்குக் கடன் வழங்கப்படும்.<br>▪ சிறுகுழு அங்கத்தவர் குறைந்தது ஆறுமாத காலமளவிற்காவது தொடர்ச்சியாகச் சேமிப்பில் ஈடுபட்டிருந்தால் மட்டுமே கடன் பெறத் தகுதியானவராவார்.<br>▪ வருமானம் ஈட்டும் நடவடிக்கையில் பயிற்சி பெற்றிருத்தல், ஒரு அங்கத்தவர் கடன் பெறுவதற்கான முதற்தேவையாகும்.<br>▪ ஒரு குறிக்கப்பட்ட நேரத்தில் ஒரு குடும்ப அங்கத்தவர் மட்டுமே கடன்பெறத் தகுதியானவர்.<br>▪ குடும்ப அங்கத்தவர் வேறெவரின் பெயரிலாவது கடன் நிலுவை இருக்கக்கூடாது.<br>▪ கடன்பெறும் தகுதியானது, முதலாவது கடனுக்கான ஒழுங்கான சேமிப்பிலும், பின்னரான கடன்களை ஒழுங்காக மீளச் செலுத்திய மையிலுமே தங்கியுள்ளது. (ஒழுங்கான நல்ல வாடிக்கையாளன்)<br>▪ தகுதியான அங்கத்தவர்கள் மட்டுமே தெரிவு செய்யப்படுவர். சாத்தியமான முதலீடுகளுக்கே கடன் வழங்கப்படும்.<br>▪ நல்ல வாடிக்கையாளன் அதே அளவு அல்லது அதற்குக் கூடிய தொரு தொகையை மீளக்கடன் பெறும் தகுதியை உடையவராவார் |
| **4. கடன்தொகை /அளவு** | ▪ கடன் அளவு பயனாளியின் இயலுமாந்தன்மை, செயற்பாடு என்பவற்றை அவதானமாக ஆராய்ந்த பின்னர் கடன் குழுவினால் தீர்மானிக்கப்படும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| | ▪ தனியொருவருக்கான கடனின் அதிகூடிய அளவு மா.கி.அ.ச. தீர்மானிக்கப்படும்.<br>▪ ஒரு அங்கத்தவர் அவரின் வேண்டுகோளுக்கமைவாகவும், அவரின் செயற்பாடு, கடனைத் திரும்ப செலுத்தும் இயலுமாந்தன்மை ஆகியவற்றைப் பொறுத்தும் சராசரியாக ரூ.30,000/- வரை கடனாகப் பெறலாம். |
| **5. பிணை** | ▪ கடன்களுக்கு சகல சிறுகுழு அங்கதவர்களும் பிணைநிற்பதோடு கடனைத் திரும்பச் செலுத்துவதற்கு கூட்டாகப் பொறுப்பானவராவார்.<br>▪ **பின்னிணைப்பு** VIல் தனிப்பட்ட கடன் ஒப்பந்தப் பத்திரம் இணைக்கப்பட்டுள்ளது. |
| **6. வட்டி வீதம்** | ▪ வட்டி வீதம் மா.கி.அ.ச.தினால் தீர்மானிக்கப்படும். ஆனால் வருடாந்த வட்டி வீதம் 12% ஆகக் குறைந்த வீதமாகும்.<br>▪ மா.கி.அ.ச.த்தினுள் வட்டிவீதம் ஒரே விதமாக இருக்க வேண்டும்.<br>▪ வட்டி முழுக்கடன் காலத்திற்கும் ஒரே சமமானதாக (Flat rate) கணிக்க வேண்டும்.<br>▪ வட்டி வீதம் வருடாந்தம் புதுப்பிக்கப்படலாம். மா.கி.அ.ச. தேவையான மாற்றங்களைச் செய்யலாம்.<br>▪ மா.கி.அ.ச.தின் பொருளாளர் அங்கத்தவர்களிடமிருந்து அறவிட்ட வட்டி, கடன் தொகையிலிருந்து மீளப்பெறப்பட்ட தொகை ஆகிய வற்றுக்கான வெவ்வேறு பதிவுகளைப் பேணல் வேண்டும். |
| **7. தயவுக்காலம்** | ▪ தயவுக்காலம் சகல சந்தர்ப்பங்களிலும் ஏற்புடையதல்ல. இது மா.கி.அ.ச.தினால் தீர்மானிக்கப்படலாம்.<br>▪ செயற்பாடுகளைப் பொறுத்து தயவுக்காலம் ஒரு மாதத்திலிருந்து ஆறுமாதங்கள் வரை வழங்கப்படலாம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| | கால்நடை வளர்ப்புத் திட்டம் :<br>பசு – 1மாதத்திலிருந்து 6 மாதம் வரை<br>ஆடு – 1மாதத்திலிருந்து 6 மாதம் வரை<br>பன்றி – 1மாதத்திலிருந்து 6 மாதம் வரை<br>கோழி – 1மாதத்திலிருந்து 2 மாதம் வரை<br>இழுவை மாடு – 1மாதத்திலிருந்து 2 மாதம் வரை<br>விவசாயத்திட்டம் :<br>நீரிறைக்கும் யந்திரம் – 1 மாதம்<br>மேட்டுநிலம் – 1மாதத்திலிருந்து 4 மாதம் வரை<br>நெல் – 1மாதத்திலிருந்து 4 மாதம் வரை<br>வேறு வருமானமீட்டும் செயற்பாட்டுத் திட்டம் :<br>தையல் இயந்திரம் – 1 மாதம்<br>நடமாடும் விற்பனை – 1 மாதம்<br>உள்நாட்டு மீன்பிடி – 1 மாதம்<br>▪ முடிந்தால், தயவுகாலத்திலும் கடனைத் திருப்பிச் செலுத்துவது ஊக்குவிக்கப்படலாம். |
| **8. கடன் காலம்** | ▪ கடன் காலம் ஒரு மாதத்திலிருந்து ஆகக்கூடியது 18 மாதம் வரையிலாகும். விதிவிலக்காக மாடு, ஆடு வளர்ப்புக்கு 24 மாதம் வரை அனுமதிக்கலாம்.<br>▪ பயிர்க்கடன்கள் அறுவடையுடன் ஒரே முறையில் மீளச் செலுத்த லாம்.<br>▪ கடனாளிகள் தமது கடன்களை முடிந்தளவு விரைவாகச் செலுத்த ஊக்கப்படுத்தப்படுவதோடு அவர்கள் அடுத்த கடன் பெறத் தகுதி யுடையவராக்க வேண்டும். |
| **9. கடன் மீளளிப்பு** | ▪ கடன் காலம் முக்கிய உள்ளீடுகளின் விநியோக நாளில் இருந்து தொடங்கும்.<br>▪ கடன் மீளளிப்பு தயவுக்காலம் (அனுமதிக்கப்பட்டால்) முடிவடை ந்ததுடன் ஆரம்பிப்பதோடு மாதாந்தம் தொடரும்.<br>▪ கடன் மீளச்செலுத்தும் காலம் திட்டத்தினைப் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| | பொறுத்து ஒரு -மாதத்திலிருந்து (ஆகக்கூடியது) 18 மாதம் வரை வேறுபடும்.<br>▪ விவசாயத்திட்டக்கடன் மீளளிப்பு பருவ காலத்தைப் பொறுத்து அமையும்.<br>▪ கடன் மீளளிப்பு வீதம் 100% ஆக அமைய வேண்டும். |
| **10. தண்டனை முறை** | ▪ கடன்குழு கீழ்வரும் தண்டனை முறைகளைக் கடன் செலுத்தத் தவறியவர்களுக்கு விதிக்கலாம்.<br>- தாமதிக்கப்பட்ட காலத்திற்கு மேலதிக வட்டிவீதம்<br>- இனிவரும் காலத்தில் கடன்பெறத் தகுதியின்மை<br>- பிணை நின்றவர்களை கடன்பெறத் தகுதியினமற்றவர் களாக்குதல்.<br>- கடன் செலுத்தத் தவறியமையை சமூகத்திற்குத் தெரிவித்தல்.<br>- கடன் செலுத்தத் தவறியமையை வேறு கடன் நிறுவனங்க ளுக்கு அறிவித்தல்.<br>- பணரீதியான தண்டம் விதித்தல்.<br>- சேமிப்பில் இருந்து அறவிடல்.<br>- கடனாளிக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல்.<br>▪ கிராம அபிவிருத்தி அலுவலர் உங்களுக்கு இவ்விடயத்தில் உதவுவார். |
| **11. வெகுமதி முறை** | ▪ மா.கி.அ.ச. பின்வரும் வெகுமதி முறைகளை நல்ல வாடிக்கையா ளர்களுக்கு அறிமுகப்படுத்தலாம்.<br>- நல்ல கடனாளிகளுக்கு திரும்பக் கடன் வசதி வழங்கல்.<br>- குறிப்பிட்ட காலத்துள் மீளச்செலுத்தியமைக்காக வட்டி வீதத்தைக் குறைத்தல்.<br>- மரபுவழிக் கடன் நிறுவனத்துடன் (வங்கி) பாரிய கடன் பெறுவதற்காக இணைத்துவிடல்.<br>- பொதுவைபவங்களில் வெகுமதிச் சான்றிதழ் வழங்கல்.<br>- நல்ல கடனாளிகளுக்கு பயிற்சி வசதிகள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| | அளித்தல்.<br>- நல்ல கடனாளிகளை பரிமாற்றுச் சுற்றுலா நிரலில் உள்ளடக்கல்.<br>▪ கி.அ.அலுவலர் உங்களுக்கு உதவுவார்.<br>▪ நியாப் திட்டம் உங்களை ஊக்குவிக்கும். |

## 8. அமுலாக்கல்

### 8.1 சிறுகுழுக்களை உருவாக்கல்

முதல் இரண்டு மாத காலப்பகுதியில் இவ்வேலையைச் செய்யவும். பின்வரும் செயற்பாடுகளை முதல் இரண்டு மாதங்களில் நிறைவேற்றவும்.

- மா.கி.அ.ச.அங்கத்தவர்கள் 5–7 பேர்களைக் கொண்டு சிறுகுழுக்களை உருவாக்கவும். (ஆகக் கூடியது 7 மாதர்கள்)
- முழு நம்பிக்கை, ஒரே வருவாய் மட்டம் என்பற்றை அடிப்படையாகக் கொண்டு அங்கத்தவர்கள் சிறுகுழுவை அமைப்பர்.
- சிறுகுழுக்கள் உருவாக்கல் சுயமான தேர்வு அடிப்படையிலானதாகும்.
- ஒவ்வொரு சிறுகுழுக்களும் தத்தமது தலைவரையும், பொருளாளரையும் தெரிவு செய்வர்.



- சிறுகுழுக்கள் தத்தமது குழு அங்கத்தவர்களை சேமிப்பதற்குத் தூண்டுவார்கள். அத்துடன் பொருத்தமானதும் சாத்தியமானதுமான (LSA) செயற்பாடுகளை இனம் காணுவர்.
- சிறுகுழுக்கள் தங்களிடையே நெருக்கமான தொடர்புகளை வைத்திருப்பர்.
- பரஸ்பர உதவிகளுக்காக சிறுகுழு ஒழுங்கான முறையில் வாராந்தம் கூடுவர்.

*5-7 வரையான அங்கத்தவர்களைக் கொண்ட சிறுகுழுக்களை உருவாக்கியமையை நீங்கள் உறுதிப்படுத்திக்கொள்வீர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.2 சிறுகுழு சேமிப்பு

முதல் ஆறுமாத காலப்பகுதியிலும் அதன்பிறகு தொடர்ந்தும் இவ்வேலையை ஆரம்பித்து தொடர்ந்து செய்யவும். இது தொடர்ச்சியான செயன்முறையாகும்.

- ஒவ்வொரு சிறுகுழுவும் வாராந்த குழு சேமிப்புத் திட்டத்தைத் தொடங்குவர். ஒவ்வொரு சிறுகுழுவும் சேமிப்பு அளவைத் தீர்மானிக்கும். அத்துடன், பருவ நிலையினால் வருமானமின்மை காரணமாய் சேமிக்க முடியாவிட்டால் அது எவ்வெவ் மாதங்கள் எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.
- சிறுகுழுவின் ஒவ்வொரு பண நடவடிக்கையும் அப்பியாசப் புத்தகமொன்றில் பதிவு செய்யப்படும். சிறுகுழு சேமிப்புக்கள் சிறுகுழுவிடையே வைத்திருப்பதுடன் அவர்கள் தீர்மானித்தபடி பயன்படுத்தலாம்.
- ஒழுங்கான சேமிப்புக்கள் கடன் பெறும் தகைமையைப் பெறுவதற்கான முன் தேவையாகக் கணிக்கப்படும்.
- ஒழுங்கான முறையில் சேமிக்கத்தவறும் அங்கத்தவர்கள் கடன்பெறும் தகுதியை இழப்பர்.

ஒழுங்கான சேமிப்புப் பழக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது, அத்துடன் திருப்திகரமான குழு சேமிப்பு அடையப்பட்டுள்ளது என்பன உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

## 8.3 நிர்வாகக்குழு உருவாக்கல்

முதல் இரண்டு மாதங்களில் நிர்வாகக்குழு உருவாக்கப்படும்.

- சிறுகுழுக்களின் தலைவர்கள் நிர்வாகக்குழு உறுப்பினராவர்
- நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தலைவர், உபதலைவர், செயலாளர், உப செயலாளர், பொருளாளர் ஆகியோருடன் நிர்வாக உறுப்பினரையும் தெரிவு செய்வர்.
- இவர்கள் சகல குழுத்தலைவர்களினது கூட்டத்தில் தெரிவாவர்.
- இவர்களது கடமைக்காலம் இரண்டு வருடங்களாகும்.

நிர்வாகக்குழு தெரிவு செய்யப்பட்டமையை உறுதி செய்தல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.4 கடன்குழு உருவாக்கல்

முதல் இரண்டு மாதங்களில் இவ்வேலை நடைபெறும். முதல் இரண்டு மாதங்களில் பின்வரும் படிமுறைகளைப் பின்பற்றவும்.

- சிறுகுழுக்களின் பொருளாளர்களிலிருந்து கடன்குழு உருவாக்கப்படும்.
- தலைவர், செயலாளர், பொருளாளர் போன்றோர் சிறுகுழுக்களின் பொருளாளர்களிடையே இருந்து தெரிவு செய்யப்படுவர்.
- சமூக ஊக்குவிப்பாளர் (CF) கடன்குழுவுக்கு உதவுவார்.



கடன் குழுவை அமைத்தல் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## 8.5 வங்கிக்கணக்கு ஆரம்பித்தல்

முதலாவது மாதத்தின் போது வங்கிக்கணக்கு ஆரம்பிக்கப்படும்.

- மா.கி.அ.ச. வா.உ.செ.(LSA)க்காக விசேடமாக சுழற்சிமுறைக் கடன் நிதிக்காக (RLF) வேறான வங்கிக்கணக்கு ஒன்றை நடைமுறைப்படுத்தும்.
- சுழற்சிமுறைக் கடன்நிதி, வேறு வருமானக் கணக்குகள் என்பன கலந்து கொள்ளாமல் இருப்பதற்காக கட்டுமான வேலைகளை அமுல் செய்யும். மா.கி.அ.ச. இதற்காக வேறான கணக்கைப் பேணுமாறு விதந்துரைக்கப்படுகிறது.




- மா.கி.அ.ச.தின் நிர்வாகக் குழு சமூக அவசரத் தேவை நிதிக்காக(CCF) ஒரு வேறான கணக்கை நடைமுறைப்படுத்தும்.
- சமூக ஊக்குவிப்பாளர்(CF) இந்நடவடிக்கையில் தனிப்பட்ட முறையில் ஈடுபடுவார்.
- சமூக வலுவூட்டலாளர் இவ்விடயத்தை ஊக்குவிப்பார்.
- கி.அ.உ.(RDO) உங்களுக்கு உதவுவார்.
- வா.உ.செ.க்கான வங்கிக்கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டமையை உறுதி செய்யவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுழற்சிமுறைக் கடன் நிதி (RLF)

- கடன் அறவீடு செய்தவுடன் மீளப்பெற்ற தொகையை வங்கிக் கணக்கு ஒன்றில் வைப்புச் செய்கின்றமையை மா.கி.அ.ச.தின் நிர்வாக சபை உறுதி செய்து கொள்ளும்.
- மீளப்பெறப்பட்ட நிதி உடனடியாகவே சுழற்சிமுறைக்கு உட்படுத்தப்படும்.
- நல்ல வாடிக்கையாளர் புதிய சுழற்சிக்கடன் பெறுவதோடு அதிக தொகையாகவும் பெறுவார்.
- மா.கி.அ.ச. நிர்வாகக் குழு அங்கத்தவர்கள் சகல தகுதியுள்ள அங்கத்தவர்களையும் உள்ளடக்குவதோடு அவர்கள் உதவித் திட்டத்தின் கீழ் கவனத்திலெடுக்கப்பட்டுள்ளார்கள் என்பதை உறுதி செய்வர்.
- சுழற்சிக் கடன்முறை பயன்பெறக்கூடிய வகையில் செயன் முறையில் உள்ளதென்பதை கி.அ.உ.(RDO) உறுதி செய்வார்.

## சமூக அவசரத் தேவை நிதி (CCF)

- கடனாளிகளின் கட்டுப்பாட்டிற்கப்பால் ஏதாவது காரணங்களால் கடன் அறவீடு செய்ய முடியாத நிலை ஏற்பட்டால் அந்நிலைமை யைச் சமாளிப்பதற்கு சமூக அவசர தேவை நிதி ஒன்றைக் கட்டாயமாக மா.கி.அ.ச. ஆரம்பிக்க வேண்டும்.
- தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக கடனாளி கடனைச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டால் அந்நிலைமையைச் சமாளிக்க **“சமூக அவரசத் தேவை நிதி”** ஏற்படுத்தப்படல் வேண்டும்.
- வட்டி, தண்டனைப் பணம் என்பனவற்றைச் சமூக அவசரத் தேவை நிதிக்கணக்கிற்குச் சேகரிக்கலாம்.
- சமூக அவசர நிதியை நிர்வாகக்குழுவின் ஏகமனதான தீர்மானத்தின் மூலமே பயன்படுத்தப்படலாம்.
- சமூக அவசர தேவை நிதியை நிலைமை பற்றி ஆழமாக ஆய்ந்த பின்னரே பயன்படுத்த வேண்டும்.
- மா.கி.அ.ச. நிர்வாகக் குழு ஏதாவது மாற்றங்களின் பிரகாரம் பதிவுகளில் தேவையான ஆவண மாற்றங்களைச் செய்ய நடவடிக்கை எடுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.6 தொழில் முயற்சித்திட்டம், கடன் விண்ணப்பம் என்பன தயாரித்தல்

- மா.கி.அ.ச.அங்கத்தவர்கள் தங்கள் தேவைகளை அடையாளம் காண்பர்.
- முன்னுரிமைப்படுத்தப்பட்ட அங்கத்தவர்கள் தாம் தொடரவுள்ள வாழ்வாதார நடவடிக்கையைத் தீர்மானிப்பர்.
- அங்கத்தவர் தொழில்முயற்சித்திட்டத்தையும், கடன் விண்ணப்பத்தையும் தயாரிப்பார்.
- அங்கத்தவர் தனது தொழில்முயற்சித்திட்டத்தைத் தயாரிப்பதற்குப் பொருத்தமான தொழில்நுட்பத் திணைக்களத்தின் உத்தியோகத்தரின் உதவியை நாடலாம்.
- சமூக வலுவூட்டாளலரும், சமூக ஊக்குவிப்பாளரும் இந்த செயல்முறை முழுவதிலும் உதவுவார்கள்.

**முன்னுரிமை நிரல்**

முன்னுரிமை 1 பெண் உதவியுடன் இயங்கும் குடும்பம்.

முன்னுரிமை 2 எந்த விவசாய நிலத்தினையும் சொந்தமாகக் கொண்டிராத குடும்பம்

முன்னுரிமை 3 வலது குறைந்தவரையும்; முன் போரில் ஈடுபட்டவரையும் கொண்ட குடும்பம்

முன்னுரிமை 4 நியாப் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப் பட்ட குளத்தின் கீழ் நீர்ப்பாசனக் காணியைக் கொண்டிராத குடும்பம்.

முன்னுரிமை 5 வேறு குளங்களின் கீழ் நீர்ப்பாசன நிலத்தைச் சொந்தமாகக் கொண்டிருக்கும் குடும்பம்



தகுதியான கடனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர் என்பதும், தொழில்முயற்சித்திட்டம், கடன் விண்ணப்பம் என்பன பூர்த்தி செய்யப்பட்டன என்பதும் உறுதிசெய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.7 கணக்குப்பதிவு, கடன்தொடர் நடவடிக்கை என்பனவற்றில் பயிற்சி



திட்டச்சுற்று முழுவதும் பயிற்சிச் செயற்றிட்டம் நடாத்தப்படும்.

- மா.கி.அ.ச.அங்கத்தவர்கள் தமது பயிற்சித் தேவைகளை இனம் கண்டு அவற்றை (நியாப்) திட்டத்திற்கு அறிவிப்பர்.
- கணக்குப்பதிவு, கடன்தொடர் நடவடிக்கை என்பனவற்றிற்கான ஆரம்பப்பயிற்சி யானது சமூக வலுவூட்டலாளர், நிர்வாகக் குழு, கடன்குழு அங்கத்தவர்கள், மா.கி.அ.ச. அங்கத்தவர்கள் ஆகியோருக்கு, அரச சார்பற்ற நிறுவனத்தினால் (NGO) நடத்தப்படும்.
- கணக்குப்பதிவு, கடன்தொடர் நடவடிக்கை என்பவற்றில் ஆழமான பயிற்சி சகல சிறுகுழு பொருளாளர்களுக்கும், சமூக ஊக்குவிப்பாளருக்கும் வழங்கப்படும்.
- மா.கி.அ.ச. அங்கத்தவர்கள் யாவரும் இப்பயிற்சித் திட்டத்தில் பங்கேற்பதை உறுதி செய்துகொள்வர்.
- பயிற்சித் திட்டத்தில் பங்கேற்றமை கடன்பெறுவதற்கான முதற்தேவையாகக் கருதப்படும்.

மா.கி.அ.ச..அங்கத்தவர்கள் யாவரும் பயிற்சித் திட்டத்தில் பங்கேற்றமையை உறுதி செய்து கொள்ளவும்.

## 8.8 கடன் விண்ணப்பங்களை மதிப்பீடு செய்தலும், அனுமதித்தலும்

கடன்குழு 6வது, 7வது மாதங்களிடையில் கடன் விண்ணப்பங்களை மதிப்பீடு செய்து அனுமதி வழங்கும்.



- கடன்குழு சிறுகுழுத் தலைவரிடம் இருந்து கடன் விண்ணப்பங்களைப் பெற்று அவர்களது கடன் விண்ணப்பம் (பின்னிணைப்புV), தொழில்முயற்சித் திட்டம் (Business Plan – பின்னிணைப்புI) என்பவற்றை ஆய்ந்து தேர்வு நெறிமுறைகளின்படி புள்ளியிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கடன்குழு கடன் விண்ணப்பத்தை அனுமதிக்கும் அல்லது புள்ளியிடலைப் பொறுத்து மேலதிக தகவல்களைக் கோரும் அல்லது கடன் விண்ணப்பத்தை நிராகரிக்கும்.
- கடன்குழு அனுமதித்த விண்ணப்பங்களை மா.கி.அ.ச. நிர்வாகக் குழுவுக்குச் சமர்ப்பிக்கும்.

கடன்குழு விண்ணப்பங்களை மதிப்பீடு செய்து அனுமதித்தமையை உறுதி செய்யும்.

## 8.9 பிரதித் திட்டப்பணிப்பாளருடன் ஒப்பந்தம் கைச்சாத்திடல்

நிர்வாகக்குழு பயனாளிகள் தெரிவும், கடன் செயற்பாடுகள் இனம் காணப்பட்டும் முடிந்தவுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வேண்டும்.

- மா.கி.அ.ச.த்தின் நிர்வாகக்குழு கடன் விண்ணப்பங்களை திட்டத்தின் கீழான நிதி உதவி பெறுவதற்காகச் சமர்ப்பித்து, பிரதித் திட்டப்பணிப்பாளருடன் ஒப்பந்தம் கைச்சாத்திடும். (பின்னிணைப்புIV)
- தனிப்பட்ட அங்கத்தவர்கள் கடன் விண்ணப்பங்களை மா.கி.அ.ச.திற்குச் சமர்ப்பிப்பர். (பின்னிணைப்புV)
- அனுமதிக்கப்பட்ட கடனாளிகள் மா.கி.அ.ச.த்தின் நிர்வாகக் குழுவுடன் கடன் ஒப்பந்தங்களைத்(பின்னிணைப்புVI) தனிப்படச் செய்து கடனைப் பெற்றுக் கொள்வர்.

நிர்வாகக்குழு ஒப்பந்தங்கள் கைச்சாத்தானதை உறுதி செய்துகொள்ளும்.

## 8.10 உள்ளீடுகளைக் கொள்வனவு செய்தலும், விநியோகம் செய்தலும்

உள்ளீடுகளைக் கொள்வனவு செய்தலிலும், விநியோகம் செய்வதிலும் மா.கி.அ.சங்கம் பிரத்தியேகமாக ஈடுபடும்.

- கடன்குழுவும் தரமான பொருட்களையும், யந்திரங்களையும் பற்றிய தொழில்நுட்ப அறிவுடைய ஒருவரும் சேர்ந்து பிரத்தியேகமாக கொள்வனவில் ஈடுபடுவர்.
- தரமான உள்ளீடுகளைப் பெறுவதற்காக கி.அ.உ(RDO) மற்றும் திணைக்கள அலுவலர், சமூக வலுவூட்டலாளர் ஆகியோரின் உதவியைப் பெற்றுக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குறைந்தது 3 கடைகளில் கூறுவிலை கோரல் மூலம் தரமான பொருட்களுக்காக, குறைந்த விலையில் பேரம் பேசி, விற்பனைக் கழிவு கேட்டு, பணத்தைச் சேமிக்க முடியும்.
- திணைக்களங்களிடம் இருந்து உத்தரவாதம் பெறுவதன் மூலமும், சந்தையில் உள்ள பல்வேறு பொருட்களின் வேறுபட்ட தரங்களை மதிப்பீடு செய்வதன் மூலமும் அண்மையில் உள்ள நகரத்தில் உள்ள பிரபலமான இயந்திரங்களையும், கருவிகளையும் கொள்வனவு செய்வதன் மூலமும் பொருட்களின் தரத்தை உறுதி செய்யலாம்.
- பாவிக்கப்பட்ட யந்திரங்களையும், கருவிகளையும் கொள்வனவு செய்தலாகாது.
- போதிய அறிவித்தலுடன் கூட்டப்பட்ட பொதுக்கூட்டத்தில் உள்ளீடுகளைப் பங்கீடு செய்யவும்.
- பாவிக்கப்பட்ட உள்ளீடுகள்/ சொத்துக்கள் போன்றவற்றின் பட்டியல் தயாரிக்கவும்.
- உள்ளீடுகளை உரிய நேரத்தில் பங்கிடவும்.
- பொதுமக்கள் அறியக்கூடிய வகையில் உள்ளீடுகளின் பெறுமதிகளைக் குறிப்பிடவும்.
- தரத்தைச் சரிபார்த்து பயனாளிகளுக்குத் தெரியப்படுத்தவும்.
- சொத்துக்களுக்கு அடையாளம் இடவும்.

தரமான யந்திரங்கள்/ உள்ளீடுகள் கொள்வனவு செய்து விநியோகித்தமையை உறுதி செய்துகொள்ளவும்.

## 8.11 கொடுப்பனவு - பணக்கோரிக்கை முறை

திட்டச்சுற்று முழுவதும் இதில் ஈடுபடல் வேண்டும்.

- மா.கி.அ.ச.த்தின் நிர்வாகக்குழுவுடன் ஒப்பந்தம் கைச்சாத்தானவுடன் பி.தி.ப. (D.P.D)ரினால் ஒரே முறையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.
- 65% முற்பணம் மா.கி.அ.ச. அங்கத்தவர்களுக்கு கடனாக முதலாவது சுற்றில் வழங்கப்படும்
- பணக்கோரிக்கைக்கான செலவுச்சிட்டைகள் கி.அ.உ.ரினால விதந்துரைக்கப்பட்டு பிரதேச செயலாளரினால் அனுமதிக்கப்பட்டு மாவட்டமட்ட திட்ட அமுலாக்கல் திணைக்களத் தலைவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதந்துரையுடன் பி.தி.ப.(D.P.D)க்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

- சகல பண நடவடிக்கைகளும், காசோலை மூலம் செய்யப்படும். காசோலைகள் மா.கி.அ.ச.தின் பெயரில் எழுதப்படும். திணைக்களத்தின் பெயரிலோ அல்லது தனிப்பட்டவரின் பெயரிலோ காசோலை எழுதப்படமாட்டாது.
- மா.கி.அ.ச.தின் தலைவரும், பொருளாளரும் பி.தி.ப.(DPD)ரிடம் இருந்து காசோலையைப் பெறுவர்.
- பிரதேச செயலாளரினாலும், கி.அ.உ.ரினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மா.கி.அ.ச.தின் வா.உ.செ(LSA) க்கான வங்கிக்கணக்கில் காசோலை வைப்பிலிடப்பட்டு, தேவையான போது கி.அ.உ.ரின் சிபாரிசுடன் கட்டம் கட்டமாகக் கடன் வழங்கப்படலாம்.
- தேவைக்கு மேலதிகமான ரொக்கக் கையிருப்பு வங்கியிலிடப்பட்டிருந்தால் வட்டி வருமானம் கிடைக்கும் என்பதாலும், இது தவறான பயன்பாட்டுக்கு இட்டுச் செல்லலாம் என்பதாலும், மேலதிக ரொக்கக் கையிருப்பு வைத்திருத்தல் வேண்டாம்.

செலவுக்கான பணக்கோரிக்கைகள் உரிய நேரத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டமையை உறுதி செய்யவும்.

## 8.12 அமுலாக்கலில் உதவி

அமுலாக்கல் காலம் முழுவதுமாக ஈடுபடல் வேண்டும்.

- வா.உ.செ(LSA) தை அமுலாக்கலில் மா.கி.அ.ச.(WRDS) திற்கு மிக முக்கியமான பொறுப்புக்கள் தரப்பட்டுள்ளன.
- கடனாளிகள் உள்ளீடுகளின் தரம், அளவு என்பவற்றில் திருப்தியடைந்துள்ளனர் என உறுதி செய்யவும்.
- கடனாளிகள் கொள்வனவின் போது பங்கேற்றனர் என்பதையும், பயிற்சித் திட்டத்தில் கலந்து கொண்டனர் என்பதையும் உறுதி செய்யவும்.
- கடன்குழு தண்டனை முறையை அமுலாக்கல் காலம் முழுவதும் நிறைவேற்றும். அத்துடன் கடன் தொகை முழுவதும் அறவிடப்பட்டதை உறுதி செய்யவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட கடன், அது வழங்கப்பட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டது என்பதையும், வேறு எந்த நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப்படவில்லை அல்லது துஷ்பிரயோகம் செய்யப்படவில்லை என்பதையும் உறுதி செய்யவும்.
- நிலைமையைச் சீர் செய்வதற்கு ஏதாவது தீர்மானம் அல்லது நெறிப்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். அத்துடன் சுமுகமான திட்ட அமுலாக்கலை உறுதி செய்யவும்.
- தேவைப்பட்ட அங்கத்தவர்கள் நியாப் திட்டத்திலிருந்து உதவி பெறுவதை உறுதி செய்வது மா.கி.அ. சங்க அங்கத்தவர்களினதும், அமுலாக்கும் முகவர்களினதும் கூட்டுப் பொறுப்பாகும்.
- திட்ட நிதியீட்டுக்காக திட்ட விபரங்களை கி.அ.உ.(RDO) ஊடாக பி.தி.ப.(DPD)க்கு சமர்ப்பிக்கவும்.
- கொடுப்பனவுகள் சம்பந்தமான உறுதிச்சிட்டைகள், ஆவணங்கள் என்பனவற்றின் பாதுகாப்பான இருப்பை உறுதி செய்யவும்.
- சகல வா.உ.செ.(LSA) பயனாளிகளையும் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக வழிகாட்டவும். அத்துடன் சுழற்சிக் கடன் முறையைத் தொடங்கவும்.
- பொருத்தமான பதிவேடுகளைப் பேணுவதோடு அவற்றினை ஒழுங்காகத் தினம் தோறும் பதியவும்.
- முதலாவது கடன், அடுத்த கடன் போன்றனவற்றுக்கு பதிவேடுகளை வைத்திருக்கவும்.
- இத்திட்டம் இயங்கும் முறையில் ஏதாவது தெளிவின்மை தவறான பிரயோகம் போன்றவற்றை செயற்குழுவுக்கு தெரியப்படுத்துவதோடு உரிய பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

  திட்ட அமுலாக்கல் சுமுகமாக நிறைவேற்றப்படுதலை உறுதி செய்யவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.13 இருப்பு எடுத்தல்

திட்ட அமுலாக்கத்தின் போது இருப்பெடுப்பதற்கு உதவுவதோடு ஒவ்வொரு காலாண்டுகளின் போதும் இதனைத் தொடர்ந்து செய்தல் வேண்டும்.

- காலாண்டுக்கொரு முறை இருப்பெடுக்கப்படும்.
- உள்ளீட்டு அளவு, உள்ளீட்டின் தரம், கடன் அறவீட்டு வீதம், பயனாளிகள் தெரிவு, ஒவ்வொரு வருமானமீட்டும் தொழில் முயற்சியினதும் சாத்தியம் என்பன சம்பந்தமாக தகவல்களைக் கொடுப்பதற்கு சகல வா.உ.செ.(LSA) பயனாளிகளும் பங்கேற்றல் முறையில் கலந்துகொள்ளல் மூலம் இருப்பெடுத்தல் நடாத்தப்படும்.
- கடன்குழு அங்கத்தவர்கள் கடனாளிகளை, காலாண்டுக்கொருமுறை சந்தித்து வருமானமீட்டும் நடவடிக்கை தொடர்பான முன்னேற்த்தை உறுதி செய்துகொள்வர்.
- பிரச்சனைகள் ஏதாவது காணப்பட்டால் கடன் குழு அங்கத்தவர்கள் கடனாளியுடன் ஆலோசித்து பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய திட்டம் ஒன்றைத் தயாரப்படுத்துவர்.

கடன்குழு அங்கத்தவர்கள் காலாண்டுக்கொருமுறை பயனாளிகளைச் சந்தித்து முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதை உறுதிசெய்துகொள்ள வேண்டும்.

## 8.14 மதிப்பிடுதல்

திட்ட அமுலாக்கத்தின் போது மதிப்பீடு செய்தலுக்கு பொறுப்பாவதோடு அதைக் காலாண்டுக்கொருமுறை தொடர்ந்து செய்யவும்.

- காலாண்டு மதிப்பீடு உபதிட்டத்தினையும், கடன் அறவீடு, சுழற்சி நிதி முதலியவை பற்றிய தகவலைப் பெறுவதற்காக பி.தி.ப.(DPD)ரினால் கேள்விக்கொத்து ஆய்வு ஊடாகச் செய்யப்படும் மதிப்பிடுதலுக்கு உதவவும்.
- பிரதித்திட்ட அலுவலகத்தில்(DPO) சகல மையக்கிராமங்களினதும் முன்னேற்றம், சொத்துக்கள், கடன் அறவீட்டுப் பிரச்சினைகள், நன்றாகச் செயற்படுவதற்கான காரணங்கள், சுழற்சிக்கடன் நிதி என்பன பற்றிய தகவல் மையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். உரிய காலத்தில் அறிக்கைகளை அனுப்புவதோடு இதற்கு உதவியும் செய்யவும்.

எப்போதும் கடன் அறவீடு 100%மாகவும், சுழற்சிக்கடன் நிதி முன்னேற்றகரமானதாகவும் உள்ளதென்பதை உறுதிப்படுத்தவும்.

## 8.15 சுழற்சிக்கடன் நிதி

சகல அங்கத்தவர்களுக்கும் நன்மை கிடைக்கும் வகையில் சுழற்சிக் கடன் நிதி திட்டத்திற்கு பொறுப்பானதாக வேண்டும்.

- மா.கி.அ.ச.கடன் அறவிட்டவுடன் அறவிட்ட நிதியை உடனே வங்கிக் கணக்கொன்றில் வைப்பிடுவதை உறுதி செய்ய வேண்டும்.
- அறவிடப்பட்ட பணம் உடனடியாக சுழற்சிமுறைக் கடன் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படும்.
- நல்ல வாடிக்கையாளருக்கு புதிய சுழற்சிக்கடன் கொடுபடுவதோடு அதிக தொகை யாகவும் இருக்கும்.
- மா.கி.அ.ச. குழு அங்கத்தவர்கள் சகல தகுதியுமுள்ள வாடிக்கையாளர்களையும் உள்ளடக்குவதோடு உதவித் திட்டத்தின் கீழ் கவனத்திலெடுக்கப்பட்டுள்ளார்கள் என்பதை உறுதி செய்வர்.
- சுழற்சிக்கடன் முறை பயன்பெறக் கூடிய வகையில் செயன்முறையில் உள்ள தென்பதை கி.அ.உ.(RDO) உறுதி செய்வார்.
- விபரிக்கப்பட்ட சரியான விதிமுறைகளைப் புதிய கடன் தெரிவு, வழங்கல் என்பனவற்றில் பின்பற்றப்படுவதை உறுதி செய்யவும்.

நிதியைத் திறமையாகப் பயன்படுத்துவதை உறுதி செய்யவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வா.உ.செ.நியாப் II

## தொழில் முயற்சித் திட்டம் - (கடன் விண்ணப்பத்திற்கு உதவுமுகமாக)

1.

| விண்ணப்பதாரியின் பெயர்:- ........................ | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|
| தே.அ.அ.இலக்கம் :- ........................ | மா.கி.அ.ச.அங்கத்துவ இல :- ........................ |
| மாவட்டம் :- ........................ | சிறுகுழு ஆரம்பித்த திகதி :- ........................ |
| கி.அ.பிரிவு :- ........................ | சிறுகுழு சேமிப்பு ஆரம்பித்த திகதி:- ........................ |
| மையக்கிராமத்தின் பெயர் :- ........................ | வாராந்தம் சேமிக்கும் தொகை :- ........................ |
| மா.கி.அ.ச.தின் பெயர் :- ........................ | விண்ணப்பத் திகதி வரை சேமித்த தொகை:- ........................ |
| சிறுகுழுவின் பெயர் :- ........................ | விண்ணப்பத் திகதி :- ........................ |
| சிறுகுழு இலக்கம் :- ........................ | பயிற்சி பெற்ற துறை :- ........................ |
| நிரந்தர விலாசம் :- ........................ | பயிற்சி பெற்ற திகதி :- ........................ |

**2. கடனாளியின் பொதுவான தகவல்:**

2.1 கல்வி(உயர்நிலையைக் குறிப்பிடுக.) :- ........................

2.2 தேர்வு செய்த பொருளாதார நடவடிக்கையில் அனுபவம் :- ........................

2.3 உள்ளீடு, உற்பத்தி என்பவற்றில் சந்தை அறிவு :- ........................

2.4 நாளாந்தம் தற்போதைய தொழில்முயற்சியில் ஈடுபட நினைத்திருக்கும் நேரம்(மணித்தியாலங்கள்):- ........................

2.5 சந்தைப்படுத்தல் அனுபவம் :- ........................
எந்த உற்பத்தியில் :- ........................

2.6 தங்கிவாழ்வோர்:- ஆண் :- ............ பெண் :- ............ வயது:- ......

2.7 பாடசாலை செல்வோர் ஆண் :- ............ பெண் :- ............ வயது:- ......

2.8 தொழில் முயற்சியில் உதவக்கூடிய குடும்ப அங்கத்தவர் :- ........................
நாளாந்தம் செலவிடக் கூடிய காலம் (மணித்தியாலங்களில்) :- ........................

2.9 முன்னர் கடன் வாங்கியிருந்தால்;
யாரிடமிருந்து? :- ........................
எவ்வளவு? :- ........................
தற்போது திரும்பச் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை :- ........................

2.10 தற்போது கிடைக்கும் ஒழுங்கான வருமானம் (ஏதாவது இருந்தால்) :- ........................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.

3.1 வருமானமீட்டும் நடவடிக்கை (I.G.A)யின் சாத்திய நிலைமை

| இல. | வளங்கள் | கிடைக்கக் கூடியவை | |
|---|---|---|---|
| | | ஆம் | இல்லை |
| 1. | கடனாளி பின்வருவனவற்றைக் கொண்டுள்ளாரா?<br>- காணி<br>- கட்டிடம்<br>- கருவிகள்<br>- யந்திரம்<br>- ஏனைய (குறிப்பிடுக) வாங்கியவை | | |
| 2. | கடனாளி திட்டம் சம்பந்தப்பட்ட நுண்அறிவைப் பெற்றுள்ளாரா?<br>- பயிற்சி ஊடாக<br>- அனுபவம் ஊடாக | | |
| 3. | கடனாளி அனுபவம் பெற்றமை எவ்வாறு?<br>- சொந்த முயற்சியைக் கொண்டு நடத்தியதூடாகவா?<br>- வேறு முயற்சியில் வேலை செய்ததூடாகவா? | | |
| 4. | கடனாளி நிதி வளங்களை எவ்வடிவில் வைத்திருக்கிறார்?<br>- சொந்த மூலதனப் பங்களிப்பு கொடுப்பனவு<br>- சொந்த தொழிற்பாட்டு மூலதனம் | | |
| 5. | திட்டம் இவற்றை வழங்குமா?<br>- குடும்ப அங்கத்தவர்களுக்கு மேலதிக வேலை வாய்ப்பு<br>- வேறு நபர்களுக்கு வேலைவாய்ப்பு | | |

3.2 வருமானம் ஈட்டும் நடவடிக்கை முகாமைத்துவம்

| இல. | முகாமைத்துவம் | கிடைக்கக் கூடியவை | |
|---|---|---|---|
| | | ஆம் | இல்லை |
| 1. | வருமானமீட்டும் நடவடிக்கை யாரால் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது?<br>- கடனாளியால்<br>- கடனாளியின் கணவர்<br>- ஒரு குடும்ப அங்கத்தவர் | | |
| 2. | தொழில் முயற்சிக்குத் தேவையான உள்ளீடுகள் கிடைக்குமா?<br>- போதிய அளவில் கிடைக்குமா?<br>- சரியான தரத்தில் கிடைக்குமா?<br>- நியாயமான விலையில் கிடைக்குமா? | | |

3.3 நேரப்பகிர்வு (ஏதாவது ஒன்றைத் தெரிக)

| இல. | நேரப்பகிர்வு | கிடைக்கக் கூடியவை | |
|---|---|---|---|
| | | ஆம் | இல்லை |
| 1. | கடனாளி ஏனைய வீட்டு நடவடிக்கைகளுக்கு செலவிடும் நேரத்தை விடக் கூடிய நேரம் வ.ஈ.ந.(IGA)க்கு செலவிடுவாரா? நேரம் ஒரு கட்டுப்படுத்தும் காரணியல்ல. | | |
| 2. | கடனாளி தெரிவு செய்யப்பட்ட வ.ஈ.நக்கு செலவிடும் அதே அளவு நேரத்தை ஏனைய குடும்ப நடவடிக்கைகளுக்கும் செலவிடுவாரா? | | |
| 3. | கடனாளி வ.ஈ.நக்கு குறைந்த நேரத்தையும் ஏனைய குடும்ப நடவடிக்கைகளுக்கு கூடிய நேரத்தையும் செலவிடுவாரா? | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.4 சந்தைப்படுத்தல் விடயங்கள்

| இல. | வளங்கள் | கிடைக்கக் கூடியவை | |
|---|---|---|---|
| | | ஆம் | இல்லை |
| 1. | உற்பத்தியை சந்தைப்படுத்துவதில் சமகால நிலைமை<br>- கிராமத்துக்குள்ளே விற்றுவிடலாம்<br>- மாவட்டத்துக்குள்ளே விற்றுவிடலாம்<br>- மாவட்டத்துக்கு வெளியே விற்றுவிடலாம் | | |
| 2. | சந்தை வாய்ப்புக்கள்<br>- உற்பத்திக்கு அதிகமான கேள்வி உள்ளதா?<br>- உற்பத்தியின் நிரம்பல் போதுமானதல்லவா?<br>- சந்தையில் உற்பத்திக்குப் பதிலீடுகள் உள்ளனவா? | | |
| 3. | போட்டியாளர்களிடையே உமது உற்பத்திக்கு என்ன சந்தை வாய்ப்புக்கள் உள்ளன?<br>-<br>- | | |
| 4. | உமது பொருட்களைச் சந்தைப்படுத்துவதில் ஏதாவது பிரச்சனைகள் உளவா? (குறிப்பிடுக)<br>-<br>- | | |
| 5. | ஆம் எனில், நீங்கள் எவ்வாறு இப்பிரச்சனைகளைத் தீர்ப்பீர்கள்? (குறிப்பிடுக)<br>-<br>- | | |
| 6. | சந்தைப்படுத்தல் திட்டக்கூறிக்கோள் பற்றி குறிப்பிடவும்<br>- விலைக்குறிப்பீடல் :-<br>- தரம் உயர்வு :-<br>- அறிமுகப்படுத்தல் :-<br>- மேம்படுத்தப்பட்ட விற்பனைத் தந்திரங்கள் :-<br>- ஏனையவை (தயவுசெய்து குறிப்பிடுக):- | | |

## 4. திட்டச்செலவும், முதலீட்டு வழிவகையும்

| பட்டியல் விபரம் | | பெறுமதி(ரூபா) |
|---|---|---|
| முதலீட்டு செலவு (நிலம், மிருகங்கள், கட்டிடம், யந்திரம், தளபாடம், பொருட்கள் என்பன) | | ................... |
| நடைமுறைச்செலவு | | |
| - மூலப்பொருட்கள்(தீனி, விதை, விவசாய இரசாயனம் என்பன) | ................... | |
| - உழைப்பு | ................... | |
| - போக்குவரத்து | ................... | |
| - காப்புறுதி | ................... | |
| - அவசர தேவை | ................... | |
| - ஏனையவை (குறிப்பிடுக.) | ................... | |
| உபமொத்தம் | | ................... |
| மொத்தச் செலவு | | |

மொத்தச் செலவு - சொந்த முதலீ ..................

- கடன் ..................

மொத்தம் ..................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. செயற்திட்ட வருமானம்**

| செயற்றிட்ட வருமானம் | மாதாந்தம் | அரைவருடமாக |
|---|---|---|
| மொத்த விற்பனை | | |
| மொத்தச் செலவு | | |
| வருமானம் | | |

**6. கடனின் விதிகளும், நிபந்தனைகளும் :-**

- கடன்தொகை :- ............................................
- தயவுகாலம் :- ............................................
- திரும்பச்செலுத்தும் காலம் :- ............................................
- தயவுகாலம் தவிர்ந்த திரும்பச் செலுத்தும் காலம் :- ............................................
- வட்டி வீதம் :- ............................................
- பிணை :- சிறுகுழு...அங்கத்தவர்கள்...அனைவரதும்...பிணை

**7. திரும்பச் செலுத்தும் இயலளவு:-**

கடன் தவணைப் பணம் :- ..............................

வட்டி :- ..............................

..............................

தேறிய மாதாந்த / அரையாண்டு வருமானம் :- ..............................

கழிக்குக. வட்டியும் முதலும் (மாதாந்தம் / அரையாண்டு) :- ..............................

ஏனைய குடும்ப செலவுகளுக்காக உள்ள மீதி :- ..............................

**8. பொருளாதார பரிசீலனை:-**

- மேலதிக வேலைவாய்ப்பு உருவாக்கம் :- ..............................
- உள்ளூர் மூலப்பொருள் பாவனை :- ..............................
- அதிகரித்த பெறுமதிச் சேர்க்கை :- ..............................
- மாதர் பங்களிப்பு :- ..............................

மேற்கூறிய தகவல்கள் உண்மையானவை என்பதையும், முயற்சித்திட்டம் நிதி ரீதியாகப் பொருத்தமானது எனவும், தொழில்நுட்ப ரீதியாக சாத்தியமானது எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.............................. ..............................

கடனாளியின் கையொப்பம் திகதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சிறப்புத்தன்மைகள் / தேர்வு நெறிமுறை விதி | 39க்கு குறைவான வயதில் குடும்பத் தலைவரை இழந்த குடும்பம் | 40க்கு அதிகமான வயதில் குடும்பத் தலைவரை இழந்த குடும்பம் | 39க்கு குறை வான வயதில் ஏதாவது உழைக்கும் அங்கத்தவரை இழந்த குடும்பம் | திருமணமாகிய பின்னர் தனது குடும்பத்துடன் வசிக்கும் மா.கி.அ.ச. அங்கத்தவர் | தனது பெற்றோருடன் வசிக்கும் திருமணமாகாத மா.கி.அ.ச. அங்கத்தவர் | பயன்பாடான சொத்துக் களை 11 வருடங்களுக்கு மேலாகக் கைவிட்டுள்ள குடும்பங்கள் | பயன்பாடான சொத்துக்களை 10 வருடங்க ளுக்குள் கைவிட்டுள்ள குடும்பங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. உள்ளூரில் இடம்பெயர்ந்த அனர்த்தம் / போரினால் பாதிக்கப்பட்ட குடும்பம் | 13 | 12 | 11 | 10 | 9 | 8 | 7 |
| 2. விவசாய நிலம் எதனையும் சொந்தமாகக் கொண்டிராத குடும்பம் | 12 | 11 | 10 | 9 | 8 | 7 | 6 |
| 3. உடலூனமுற்ற நபரைக் கொண்ட குடும்பம் | 11 | 10 | 9 | 8 | 7 | 6 | 5 |
| 4. முன்னை நாள் படைவீரர் குடும்பம் | 10 | 9 | 8 | 7 | 6 | 5 | 4 |
| 5. திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட குளத்தின் நீர்ப்பாசன நிலத்தை சொந்தமாகக் கொண்டிராத குடும்பம். | 9 | 8 | 7 | 6 | 5 | 4 | 3 |
| 6. வேறு குளத்தின் கீழ் நீர்ப்பாசன நிலத்தைச் சொந்தமாகக் கொண்டிருக்கும் குடும்பம் | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 |

***முக்கிய குறிப்பு :** புள்ளிமுறை 2 இலிருந்து 13 வரை மாறுபடும். ஒரு குடும்பத்திற்கு பல்வேறு வகைகளில் புள்ளிகள் இருந்தால் அவ்வகைகளின் சராசரியை எடுத்துக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாவது வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத்திட்டம் (நியாப் II)

### நியாப் II திட்டத்தின் கீழ் நிதி உதவிக்கான விண்ணப்பமும் ஒப்பந்தமும்

..........................................மாவட்டத்தில் ..........................................மையக்கிராமத்தின் மா.கி.அ.சங்கத்தின் நிர்வாக அங்கத்தவர்களாகிய இதன் கீழ் கையொப்பமிடும் நாங்கள், நியாப் II திட்டத்தின் கீழ் நிதி உதவி பெறுவதற்காக விண்ணப்பிக்க விரும்புகிறோம். நியாப் II திட்டத்தினால் எமது விண்ணப்பம் நிதியிடலுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டால் கீழ்வரும் நிபந்தனைகளை நாம் பூர்த்தி செய்வதனை உறுதிப்படுத்த இணங்குகின்றோம்.

அ. கிராமத்தில் வாழுகின்ற தேவையான சகல குடும்பங்களுக்கும் இதன் நன்மைகள் சென்றடைய விடுதல்.

ஆ. ஒதுக்கப்பட்ட நிதியைத் திட்ட நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்துவதை உறுதிப்படுத்துவதோடு எதிர்காலத்தில், கிராமத்தின் சகல பயனாளிகளும் பயனடையும் வகையில் சுழற்சி பண்ணப்படும்.

இ. மொத்தச் செலவான ரூபா..............................இல் திட்டச் செலவான ரூபா.................... (உள்ளீட்டுச் செலவு) வைப் பயன்படுத்துதல்.

| | |
|---|---|
| ...................................... | ...................................... |
| தலைவர் : மா.கி.அ.ச. | செயலாளர் : மா.கி.அ.ச. |
| திகதி:...................................... | திகதி:...................................... |

<u>சிபார்சு செய்யப்படுகிறது.</u>

| | |
|---|---|
| ...................................... | ...................................... |
| கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் | பிரதேச செயலாளர். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத்திட்டம் (நியாப் II)

**இணக்க ஒப்பந்தம்**

.........................ம் ஆண்டு .............................மாதம் .........................திகதி ஆகிய இன்று, உட்துறைமுக வீதி, திருகோணமலை என்னும் விலாசத்தில் அமைந்துள்ள வடக்கு கிழக்கு மாகாண சபை(இதன் பின்னர் இவர் தொழில் வழங்குனர் என அழைக்கப்படுவார்)க்கும் ......... ......................................................................................................... எனும் விலாசத்தில் அமைந்துள்ள மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் (இதன் பின்னர் இவர் மா.கி.அ.ச. எனக் குறிப்பிடப்படும்) இற்கும், இடையில் செய்துகொள்ளப்படும் இணக்க ஒப்பந்தமாவது;

இதற்கு அத்தாட்சியாக மேற்குறித்த பகுதியினர் மேற்குறித்த திகதியில் இவ்விணக்க ஒப்பந்தத்தை நிறைவேற்றிக் கொள்ள காரணம் ஏற்பட்டுள்ளது.

ஆகையால், தொழில் வழங்குனர் இதன் மூலம் மா.கி.அ.ச................................................................ (திட்டத்தின் பெயர்) எனும் திட்டத்தினை ஒப்பந்த இல.:-.................... (இதன் பின்னர் வேலை என அழைக்கப்படும்) ரூபா..............................................................க்கான ஒப்பந்த வேலையை முடிவுறுத்தி வழங்க வேண்டும் என்று பெருவிருப்புக் கொண்டுள்ளார்.

இவ் ஒப்பந்தத்தின் கீழ் பெறப்பட்ட நிதியின் மீது வடக்கு கிழக்கு மாகாணங்களின் கௌரவ ஆளுனர் அவர்களினால் நிறுவப்பட்டுள்ள வாழ்வாதார கடன் முகாமைத்துவ சேவைகள் நிலையம் முழுக்கட்டுப்பாட்டினைக் கொண்டிருக்கும்.

**தொழில் வழங்குனரின்** ஒப்பம் : ................................................................................

................................................................................

**சாட்சி 1.** (பிரதித்திட்ட அலுவலக உத்தியோகத்தர்): ..................................................

**சாட்சி 2.** (மாவட்டமட்ட திணைக்களத் தலைவர்) : ..................................................

**மா.கி.அ.ச.** ஒப்பம் (பொருளாளர்) : ................................................................................

................................................................................

**சாட்சி 1.** (மா.கி.அ.ச. தலைவர்) : ................................................................................

**சாட்சி 2.** (மா.கி.அ.ச.செயலாளர்) : ................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத்திட்டம் (நியாப் II)

## தனிநபர் கடன் விண்ணப்பம்

1. கடனாளியின் பெயர் ..............................................................
2. மா.கி.அ.ச.பெயர் ..............................................................
3. கோரப்பட்ட கடன் தொகை : ..............................................................
4. கடனின் நோக்கம் ..............................................................
5. கடனாளியின் பிரகடனம் : ..............................................................

என்னால் தரப்பட்ட விபரங்கள் யாவும் சரியானவை என்பதையும், என்னால் கோரப்பட்ட நோக்கத்திற்காகக் கடனைப் பயன்படுத்துவேன் என்பதையும், மா.கி.அ. சங்கத்துடன் உடன்பட்டபடி மாதாந்த / பருவகால (பயிர்க்கடனாயின் ஒரே தவணையில்) தவணைக் கட்டணங்களைச் செலுத்துவேன் என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்.

..............................................
விண்ணப்பதாரியின் ஒப்பம்

6. நடவடிக்கை பற்றிய மதிப்பீடு (கடன் குழுவினால் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும்)

| தேர்வு நெறிமுறை | தகைமை | புள்ளி |
|---|---|---|
| 1. செயற்பாட்டின் நடைமுறைச் சாத்தியம் | 1.1. கடனாளி தெரிவு செய்யப்பட்ட செயற்பாட்டில் கொண்டுள்ள அனுபவமும் செயற்பாட்டின் சாத்தியமும் | 3 |
| | 1.2. செயற்பாட்டில் கடனாளி கொண்டுள்ள நல்ல எதிர்பார்ப்பும் செயற்பாட்டின் சாத்தியமும் | 2 |
| | 1.3. தெரிவு செய்யப்பட்ட செயற்பாட்டில் கடனாளி அனுபவம் கொண்டிருக்கவில்லை ஆனால் நல்ல வினைத்திறன் உடையவர் | 1 |
| | 1.4. தெரிவு செய்யப்பட்ட செயற்பாட்டில் கடனாளி அனுபவம் கொண்டிருக்கவில்லை, அத்துடன் அவரிடம் வினைத்திறமையும் இல்லை. | 0 |
| 2. செயற்பாட்டின் முகாமைத்துவம் | 2.1 சரியான அளவில் சரியான தரத்தில், சரியான விலையில் உள்ளீடுகளைப் பெற்றுக்கொள்ளல். உள்ளீட்டு விநியோகத்தில் ஒரு பிரச்சனையும் இல்லை. | 3 |
| | 2.2 சரியான அளவில் உள்ளீடுகளைப் பெற்றாலும் நியாயமான தரத்திலும், நியாயமான விலையிலும் கிடைக்கும். | 2 |
| | 2.3 நியாயமான விலையிலும், நியாயமான தரத்திலும் உள்ளீடுகளைப் பெற்றுக்கொள்ளல் | 1 |
| | 2.4 குறைந்த தரத்திலும், குறைந்த அளவிலும் ஆனால் உயர் விலையில் உள்ளீடுகளைப் பெற்றுக் கொள்ளல். | 0 |
| 3. நேரப்பங்கீடு | 3.1 கடனாளி ஏனைய குடும்ப நடவடிக்கைகளுக் கானதை | 3 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | விடக் கூடுதலான நேரத்தை வருமான மீட்டும் செயற்பாடுகளுக்கு ஒதுக்க முடியும். | |
| | 3.2 கடனாளி குடும்ப நடவடிக்கைகளுக்காக ஒதுக்கும் நேரத்துக்குச் சமமான நேரத்தை வருமானமீட்டும் செயற்பாடுகளுக்கு ஒதுக்க முடியும். | 2 |
| | 3.3 கடனாளி குடும்ப நடவடிக்கைகளுக்காக ஒதுக்கும் நேரத்தை விடக் குறைந்த நேரத்தை வருமான மீட்டும் செயற்பாடுகளுக்காக ஒதுக்க முடியும். | 1 |
| | 3.4 வருமானமீட்டும் செயற்பாடுகளுக்காக நேரம் ஒதுக்க முடியாமல் உள்ளது | 0 |
| 4. சந்தைப்படுத்தலில் இடையூறு | 4.1 தேர்ந்தெடுத்த வ.ச.செ.(IGA) உன்னதமான சந்தை வாய்ப்புக்களை உடையது. | 3 |
| | 4.2 தேர்ந்தெடுத்த வ.ச.செ(IGA) நல்ல சந்தை வாய்ப்புக்களை உடையது | 2 |
| | 4.3 தேர்ந்தெடுத்த வ.ச.செ(IGA) மட்டுப்படுத்தப்பட்ட சந்தை வாய்ப்புக்களை உடையது. | 1 |
| | 4.4 தேர்ந்தெடுத்த வ.ச.செ(IGA) சந்தை வாய்ப்புக்கள் அற்றது. | 0 |

**கடன் அனுமதிக்கான தீர்மானமெடுப்பதற்கான புள்ளியீடல்**

(கடன் குழுவினால் மதிப்பிடப்படும்) தயவு செய்து பொருத்தமான இலக்கத்தை வட்டமிட்டு மொத்தத்தைக் கூட்டிப்பெறவும்

| | |
|---|---|
| 1. செயற்பாட்டின் நடைமுறைச் சாத்தியம் | 3 / 2 / 1 / 0 |
| 2. செயற்பாட்டின் முகாமைத்துவம் | 3 / 2 / 1 / 0 |
| 3. நேரப்பங்கீடு | 3 / 2 / 1 / 0 |
| 4. சந்தைப்படுத்தலில் இடையூறு | 3 / 2 / 1 / 0 |
| **மொத்தம்** | |

கடன் அனுமதிக்கப்பட்டது / அனுமதிக்கப்படவில்லை / மேலதிக தகவல் தேவை

.................................................. ..................................................

தலைவரின் ஒப்பம் — கடன் குழு

பொருளாளரின் ஒப்பம் — கடன் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Cover Printing Uthayan Trincomalee

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org